# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

**முறையீட்டு மனு எண். 538/2016/பே**
**ஆணை எண். 228 /2017 நாள்13 . 09 . 2017**

**திரு என். மதனமோகனன்,**
**5 வது வார்டு உறுப்பினர்**
**கொல்லங்கோடு பேரூராட்சி,**
**கன்னயாகுமரி மாவட்டம்.** – முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**கொல்லங்கோடு பேரூராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம்.** – எதிர் மனுதாரர்

ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பேரூராட்சியினை சேர்ந்த முன்னாள் 5 வது வார்டு உறுப்பினர் திரு என் மதனமோகனன், என்பவர் தனது முறையீட்டு மனு நாள் 06.12.2014 ல் கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு முன்னாள் பேரூராட்சித் தலைவர் மற்றும் செயல் அலுவலர், கொல்லங்கோடு பேரூராட்சி ஆகியோர் மீது புகார் தெரிவித்து விசாரணை கோரி ஊழல் கண்காணிப்புத்துறைக்கு சமர்ப்பித்த மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 3291 /2015/இ2/நாள் 02.06.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2016 ம் தேதி பெறப்பட்டது. அம்மனுவானது முறையீட்டு மனு எண் 538/16 என எண்ணிடப்பட்டு மேற்படி முறையீட்டு மனுவின் மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு ஆய்வு செய்து கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பேரூராட்சியில் நடக்கும் அனைத்து வேலைகளிலும் முறைகேடுகள் நடப்பதாகவும், ஏராளமான வேலைகள் டெண்டர் எடுத்த தொகையை விட பல மடங்கு அதிகமாக காணப்படுவதாகவும், செய்து முடித்துள்ள பணிகள் மிகவும் மோசமாகவும்,

தரக்குறைவாகவும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். டெண்டர் விலையை விட அதிகமாக செய்யப்பட்டுள்ள தொகைக்கு ஏற்றார் போல் தீர்மானம் இயற்றாமல் புதிய வேலையாக கருதி தீர்மாணம் இயற்றப்படுவதாகவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள இம்முறைகேடுகள் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ 10/-க்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டு, படிவம் 1 ஐ பூர்த்தி செய்து சமர்ப்பித்திட வலியுறுத்தி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 538/2016/பே/13.06.2016 ன் மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையிட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய முறையில் நாளது தேதி வரை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யவில்லை.

இருப்பினும் முறையீட்டு மனுதாரின் மனு சம்பந்தமாக நேரடி வாக்குமூலத்தினை பதிவு செய்யும் வகையில் இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2017 பிற்பகல் 3.00 மணிக்கு நேரில் ஆஜராகுமாறு தெரிவித்து இம்முறைமன்ற நடுவ எண் 538/2016/பே/நாள்02.12.2016 ன் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவ்வாறிருந்தும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட தேதியில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்யவில்லை . மேலும் முறையீட்டு மனுதாரர் வர இயலாமைக்கான எந்த காரணத்தினையும் இம்முறையீட்டு மன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவிற்கான பதிலறிக்கை / விளக்கத்தினை அனுப்பக் கோரி முறையீட்டு மனுவின் நகலினை பேரூராட்சி செயல் அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ எண் 538/2016/பே/நாள் 02.12.2016, 27.02.2017 மற்றும் 10.03.2017 ஆகிய தேதிகளில் அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண 125/2017/அ.1/நாள் 06.07.2017ன்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு என். மதனமோகனன், என்பவர் கொல்லகோடு பேரூராட்சி முன்னாள் 5 வது வார்டு உறுப்பினர் எனவும், இவருக்கும் பேரூராட்சி மன்றத் தலைவருக்கும், மன்றம் செயல்பாட்டில் இருந்த நாட்களில் சுமுகமான உறவு இல்லை என்பதினால் இப்புகார் மனுவினை சமர்ப்பித்துள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பேரூராட்சியில் நடைபெறும் அனைத்து வேலைகளுக்கும் முறையாக மன்ற தீர்மானம் பெறப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மதிப்பீடுகள் உரிய தொழில் நுட்ப அலுவலர்களால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தபுள்ளி மன்றத்தின் அங்கீகரம் பெற்று வேலை ஆணை வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

டெண்டரில் குறிப்பிட்டுள்ள தொகையினைக் கட்டிலும் கூடுதல் தொகை வழங்க இயலாது எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் டெண்டர் தொகையினைவிட பல மடங்கு அதிகமாக வேலைகள் செய்ய இயலாது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள 05.12.2014ம் தேதியில் நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளும் மேற்படி வேலைகளுக்குமான மதிப்பீடுகளும் உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளன எனவும், வேலைகள் அனைத்தும் பணி மேற்பார்வையாளரின் மேற்பார்வையிலும், இளநிலை / உதவிப் பொறியாளரின் மேற்பார்வையிலும் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். முடிக்கப்பட்ட பணிகளுக்கு இளநிலை / உதவிப் பொறியாளரால் அளவுகள் எடுக்கப்பட்டு, அளவு சுவடிகளில் பதியப்பட்டு உரிய மேலளவு செய்யப்பட்டு உதவி பொறியாளரால் பட்டியல் இறுதி செய்யப்படுவதாகவும், அதன்பின்னரே தொகை பட்டுவடா செய்யப்படுவதாகவும் இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொல்லங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட மார்ஷல்புரம் சந்தையின் உட்புறம் உள்ள கிணற்றினை ஆழப்படுத்தி சின்டெக்ஸ் அமைத்தல் பணிக்கு ரூ 1.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இவ்வேலை தொடர்பான அளவீடுகள் அனைத்தும் அளவு புத்தக எண் 22/14-15 பக்கம் 1 முதல் 33 வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உதவி செயற்பொறியாளரால் மேல் அளவுகள் செய்யப்பட்டு பட்டியல் தயாரித்து தொகை பட்டுவடா செய்யப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தற்போதும் மேற்படி சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இப்பணியினை திரு ஆண்டனி என்ற ஒப்பந்தக்காரரால் செய்து முடித்ததாகவும், பேரூராட்சி மன்றத் தலைவர் ஒப்பந்த பணிகள் எதையும் செய்யவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அனைத்து பணிகளுக்கும் **"Schedule of Rates"** படி மதிப்*பீடுகள்* தயாரிக்கப்பட்டு வருவதாகவும், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு சில வேலைகளுக்கு பல லட்சம் வழங்கப்பட்டுள்ளதாக கூறுவது தவறானதாகும் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து விதிகளின்படி உரிய படிவத்தில் மனுவை தாக்கல் செய்திடவும், வாக்குமூலம் / விளக்கத்தினை பதிவு செய்திடவும் போதிய கூடுதல் வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் , மேற்படி முறையீட்டு மனுதாரர் மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்காமலும், எந்த ஒரு முகாந்திரத்தை தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார்.

இதன் அடிப்படையில் முறையீட்டு மனுதாரருக்கு விளக்கமளிக்க ஏதும் இல்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுவதோடு, முறையீட்டு மனு சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை பதிவு செய்து கொண்டு முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 -ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வழைப்பாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-// ஆணைப்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்

பெறுநர்

1.திரு என். மதனமோகனன்,
5 வது வார்டு உறுப்பினர்
கொல்லங்கோடு பேரூராட்சி,
கன்னயாகுமரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
கொல்லங்கோடு பேரூராட்சி,
கன்னயாகுமரி மாவட்டம்.